மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் வினா எண் 181, திரு. டி. மணி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

181—

கோயில் பராமரிப்பு

***8410—திரு. டி. மணி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, சாமுண்டீஸ்வரி திருக்கோயில் பராமரிப்பின்றி பழுதுபட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனைப் பராமரிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

(இ) இக்கோயிலில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, சாமுண்டீஸ்வரி அம்மன் திருக்கோயிலில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், தற்போது உபயதாரர்களை அணுகி, அவர்கள் மூலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 7]

பணியை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், நிதிநிலை சரியாக இல்லாததால், அந்த ஊரைச் சார்ந்தவர்களிடம் ஏதாவது நிதியைத் திரட்டச் செய்வதன் மூலமாகப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்கின்ற வகையில் பதில் கூறியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்தக் கோயிலைப் பார்த்தவர்கள். எனவே, அந்த வட்டாரத்தினுடைய சூழ்நிலையை வைத்துக்கொண்டு பார்த்தால், வேறுவிதமாகப் பணத்தை வசூல் செய்வதற்கும் வாய்ப்பு இல்லாத ஒரு பகுதி. இருக்கின்ற சூழ்நிலையில், அதில் இன்னொருவிதமான கருத்து உலவி வருகிறது. நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இந்தக் கோயில்களையெல்லாம் கவனிக்கவில்லையென்ற தவறான கருத்தும் உலவுகின்ற ஒரு சூழ்நிலை அங்கே உண்டு. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி நெருக்கடி இருந்தாலும்கூட, வேறு ஏதாவது ஒரு கோயிலிலிருந்து நிதியைப் பெற்று, அந்த சாமுண்டீஸ்வரி கோயிலைப் பழுதுபார்த்து, ஒழுங்குபடுத்திட நடவடிக்கை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயத்தில் நிதி இல்லாத காரணத்தினால், அந்த ஆலயத்திற்காக நிதி கொடுப்பவர்களைத் தேடிக் கண்டறிந்து, அதன் மூலமும்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருப்பணிகள் செய்யாத ஆலயங்களுக்கு உடனடியாகத் திருப்பணிகள் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கின்ற காரணத்தினாலே, பக்கத்து ஆலயங்களில் எங்காவது நிதி இருக்குமேயானால் அதையும் கண்டறிந்து—அதற்கு மேல் அரசினுடைய நிதியில் செய்ய வாய்ப்பு இருக்குமேயானால், செய்வதற்கும் புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்று அங்கே பணியாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில், இருந்த பணியாளர்கள் ஓய்வு பெற்ற பின்னர் இடங்கள் காலியாக உள்ளன. அந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு, விதிமுறைகளுக்கு உட்பட்டு தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாமுண்டீஸ்வரி கோயில், ஜலகண்டேஸ்வர் கோயில் இல்லை.

வினா எண் 182, திருமதி கு. கலாவதி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

182—

தொழிற்பயிற்சி நிலையம்

***9162அ—திருமதி கு. கலாவதி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி கு. கலாவதி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்பதைப்போல, 'மலைவாழ் மக்களின் மான் கூட்டத்து மகளிரும் இம்மாமன்றத்திற்கு உரியவரே' என எடுத்துரைத்த என் தாயை வணங்குகிறேன். புலியை முறத்தாலே விரட்டியடித்த மலை மகளான